# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 929/2022

Prosecution Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரோஜா | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.செல்வராஜ் | Calling | : |
| Village | : வடபுதூர் | Religion | : |
| Taluk | : | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of August 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

முதல் விசாரணை :

1. நான் தற்போது வடபுதூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன். ஒரு இருசக்கர வாகனம் அங்கு வந்து நின்றது. நான் என்னுடைய மாட்டை அருகில் இருந்த செடியில் கட்டுவதற்கு குனிந்தபோது ஸ்கூட்டியில் இருந்த ஒரு நபர் என்னிடம் வடபுதூரில் துணி கம்பெனி எங்குள்ளது என்று கேட்டார். நான் அவரிடம் துணி கம்பெனி அங்கு இல்லை மசாலா கம்பெனிதான் உள்ளது என்று கூறினேன். அந்த நபர் ஜெர்கின் அணிந்திருந்தார்.

2. அவரிடம் அதனை கூறிவிட்டு திரும்பும்போது அந்த நபர் பைக்கில் இருந்து இறங்கி என் கழுத்தில் இருந்த தங்க செயினை பறித்துவிட்டார். நான் அவரிடம் ஏன் செயினை பறித்தாய் என்று கேட்டு அருகில் சென்றேன். அதற்குள் அவர் இருசக்கர வாகனத்தில் ஏறிவிட்டார். என்னைப்பிடித்து தள்ளிவிட்டார். நான் விழுந்த இடத்தில் கற்கள் இருந்திருந்தால் என் உயிர் போயிருக்கும். அவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

3. உடனடியான என்னுடைய மகனிடம் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தேன். அவர் சம்பவ இடம் வந்தார். சம்பவ இடம் வந்து என் மகன் என் மகள் மற்றும் மருமகனுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார் கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார். (புகார் **அசாஆ 1** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). என்னிடம் செயினை பறித்த நபர் ஓட்டி வந்த வாகனம் வெள்ளை நிற ஸ்கூட்டி ஆகும். பதட்டத்தில் அதன் பதிவு எண்ணை நான் பார்க்கவில்லை. என்னிடம் செயினை பறித்த நபரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். அவருக்கு அப்போது ஒரு 25 வயதிற்குள் இருந்திருக்கும்.

4. அதன்பிறகு நகையை போலீசார் கைப்பற்றினார்கள். நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து நான் நகையை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையதுதான். அந்த நகைதான் பறித்துச் செல்லப்பட்டது. (புகைப்படத்தில் உள்ள நகை **அசாபொ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

5. போலீசாரிடம் தகவல் கொடுத்த உடன் என்ன செய்தார்கள் என்றால் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். நான் நடந்ததை கூறினேன். அதன்பிறகு அவர்கள் கண்டுபிடித்து அழைக்கிறோம் என்று கூறிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். மீண்டும் எப்போது என்னை அழைத்தார்கள் என்றால் மறுதினம் என்னை அழைத்தார்கள். மறுதினம் என்னுடைய மகன் மட்டும் சென்றார் என்றும் நான் செல்லவில்லை என்றால் சரிதான்.

6. புகார் கொடுத்த பிறகு நீதிமன்றத்திற்கு வந்து நான் நகையை பெற்றுச்சென்றேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த மறுதினம் என் மகனை மட்டும் வருமாறு போலீசார்தான் கூறினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் பொட்டையாண்டிபுரத்தில்

இருந்து வடபுரம், கல்லாபுரம் செல்லும் சாலை என்றால் சரிதான், எங்களுடைய காடு ரோட்டில் இருந்து உள்ளே உள்ளது. சம்பவத்திற்கு பிறகு நான் சத்தம் எழுப்பியபோது யார் வந்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை நான் மட்டும்தான் இருந்தேன்.

7. சம்பவத்திற்கு பிறகு நகையை என்னிடம் பறித்த நபரின் அடையாளத்தை போலீசார் என்னிடம் கூறவில்லை என்றும் செய்தியை பார்த்துதான் தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல, சாட்சி தானாக முன்வந்து சம்பவத்திற்கு மறுதினம் தானும் காவல் நிலையம் சென்றதாகவும் ஆனால் நகையை தேடச் செல்வதற்கு மட்டும் என்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். காவல் நிலையத்தில் என்னிடம் செயினை களவாடிய நபரை பிடித்து வைத்திருந்தார்கள் நான் அவரை பார்த்தேன்.

8. நான் கூறுவதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் போலீசார் போட்ட பொய் வழக்கிற்காக அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் செயினை பறித்த நபர் ஹெல்மெட் அணிந்திருந்ததால் நான் அவருடைய அடையாளத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவரை நேரில் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.